# கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த உயிரியல்ரசாயண, நுண்ணுயிரியல், உயிரியல் தொழில்நுட்ப நிறுவகம் - 2011

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 முனைப்பளிவான அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டவாறான விடயங்களால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து 2011 திசெம்பர் 31 இல் உள்ளபடி உயிரியல்ரசாயண, நுண்ணுயிரியல், உயிரியல் தொழில்நுட்ப நிறுவகத்தின் நிலைவரம் மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளிலிருந்தான நிதிசார் செயலாற்றல் மற்றும் காசோட்டம் என்பவற்றை உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கியதாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்று நான் அபிப்ராயப்படுகின்றேன்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த உயிரியல்ரசாயண, நுண்ணுயிரியல், உயிரியல் தொழில்நுட்ப நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்கள் 2012 பெப்ரவரி 22 ஆந் திகதி கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. கணக்குகள் கணக்காய்வு செய்யப்பட்ட பின்னர் 2012 மார்ச் 30 ஆந் திகதி வரைபு அறிக்கை வழங்கப்பட்டது. வரைபு அறிக்கையில் ரூபா 456,967 ஆன கணக்கீட்டுக் குறைபாடுகள் சுட்டிக் காட்டப்பட்டிருந்ததுடன் ரூபா 337,380 ஆன கணக்கீட்டுக் குறைபாடுகளை சரிசெய்யப்பட்டு திருத்திய நிதிக்கூற்றுக்கள் 2012 ஏப்ரல் 20 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. தெரிவு செய்யப்பட்ட மாதிரிகளிற்கு அப்பால் மேலும் இவ்வாறான குறைபாடுகள் காணப்படுதலை கணக்காய்வில் புறக்கணிக்க முடியாதுள்ளது.

#### 2.2.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிலையான சொத்துக்கள் பட்டோலைக்கும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டிற்கும் இடையில் பின்வரும் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | **நிலையான சொத்துக்கள் பட்டோலை** | **நிலையான சொத்துக்கள் பதிவேடு** | **வேறுபாடு** |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| Refrigeration Bath | 895,767 | 904,953 | 9,186 |
| Control Head | 13,061 | 169,042 | 155,981 |
| Biospec Nano | 1,530,738 | 1,512,894 | 17,844 |
| Microplate Reader | 3,232,877 | 3,494,606 | 261,729 |
| | | | 444,740 |

### 2.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்கி ஒழுகாமை

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் 1646 இன் பிரகாரம் நாளாந்த ஓட்டப் பதிவேடுகள் மற்றும் மாதாந்தப் பொழிப்புகள் குறித்த மாதம் முடிவுற்று தொடர்ந்து வரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 01 தொடக்கம் 10 மாத தாமதத்தின் பின்னர் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஓட்டக் குறிப்புகளில் மைலோமீற்றர் தொடர்பான பதிவுகள், ஓடிய தூரம் குறித்த விபரங்கள் மற்றும் விரயமான எரிபொருள் தொடர்பான பதிவுகள் மேற்கொள்ளப்படாதிருந்த மற்றும் வாகனத்தினை உபயோகித்த உத்தியோகத்திரினால் அது குறித்து உறுதிப்படுத்தி கையொப்பமிடப்படாதிருந்த சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன.

### 2.2.4 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்கள்

29/98, 29/98(i), 07/2007(i) மற்றும் 02/2009(i) ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைகளிற்கு முரணாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் இரண்டாம் மற்றும் மூன்றாம் மொழித் தேர்ச்சிக்காக 2011 ஆம் ஆண்டில் ரூபா 13,816 செலுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிறுவக செயற்பாடுகளிலிருந்தான நிதி விளைவுகள் மீண்டெழும் செலவினத்திற்கான அரசாங்க மானியத்தைக் கணக்கிலெடுக்க முன்னர் ரூபா 35,130,967 பற்றாக் குறையொன்றானதுடன் நேரொத்த முன்னைய ஆண்டுக்கான பற்றாக்குறை ரூபா 28,768,772 ஆகும். மீளாய்வாண்டிற்கான மீண்டெழும் செலவினங்கள் மற்றும் பேணுகைச் செலவினங்களிற்கான ரூபா. 35,588,306 அரசாங்க மானியத்தைக் கணக்கிலெடுத்த பின்னர் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா. 457,339 மிகையொன்றாகியிருந்ததுடன் முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினங்களுக்கான ரூபா 26,200,000 அரசாங்க மானியம் காரணமாக அவ்வாண்டின் பற்றாக்குறை ரூபா 2,368,772 வரை குறைவடைந்திருந்தது. மீளாய்வாண்டில் கிடைத்திருந்த அரசாங்க மானியத்தில் காணப்பட்ட அதிகரிப்பே நிதி விளைவுகளின் இச் சாதக நிலைக்கு காரணமாகியிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

நிறுவகத்தில் தத்துவவியல் முதுமானி மற்றும் தத்துவவியல் பேராசிரியர் என்ற 02 பட்டப் பாடநெறிகளும் 02 விஞ்ஞான கலாநிதி பாடநெறிகளுமாக 04 பட்டப்பின் படிப்பு பாடநெறிகள் நடாத்தப்பட்டிருந்ததுடன் அது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கடந்த 5 ஆண்டுகளில் புதிய மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளல் மீதான தகவல்கள் வருமாறு

| ஆண்டு | விஞ்ஞான முதுமானி (MSC) | தத்துவவியல் முதுமானி (Mphil)/ தத்துவவியல் கலாநிதி (PhD) |
|---|---|---|
| 2007 | 11 | 1 |
| 2008 | 13 | 5 |

| | | |
|---|---|---|
| 2009 | 12 | 1 |
| 2010 | 19 | 1 |
| 2011 | 10 | - |

இதற்கு மேலாக மீளாய்வாண்டில் ஏனைய நிறுவனங்களில் பதிவுசெய்து கொண்டுள்ள 07 மாணவர்கள் ஆய்வுப் பணிகளில் ஈடுபட்டிருந்தனர்.

(ஆ) மீளாய்வாண்டில் விஞ்ஞான முதுமானிப் பட்டத்திற்காக 10 மாணவர்கள் பதிவுசெய்து கொண்டிருந்ததுடன் தத்துவவியல் முதுமானி / தத்துவவியல் கலாநிதி பாடநெறிக்காக ஒரு மாணவேரேனும் உள்வாங்கப்பட்டிருக்கவில்லை. ஆண்டில் பட்டப்பின் படிப்பு பட்டங்களைப் பெற்று வெளியேறியிருந்தோர் எண்ணிக்கை 09 ஆகும்.

(இ) 2011 ஆம் ஆண்டில் 10 புதிய மாணவர்கள், 2010 ஆம் ஆண்டின் விஞ்ஞான முதுமானி (MSC) பட்டப்படிப்பிற்காக 19 பேர்கள், தத்துவவியல் முதுமானி (Mphil)/ தத்துவவியல் கலாநிதி (PhD) பட்டப்படிப்பிற்காக 11 பேர்கள், சித்தியெய்தாத 04 பேர்கள் மற்றும் 07 மறைமுக மாணவர்கள் என்போரை உள்ளடக்கி நிறுவகத்தில் காணப்பட்ட மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 51 ஆகும். இருந்த போதிலும், ரூபா 116,864,648 பெறுமதியான 27000 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட நான்கு மாடிக் கட்டிடமொன்றில் நிறுவகம் நடாத்திவரப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் ரூபா 42,909,707 மீண்டெழும் செலவினமொன்றும் ரூபா 7,750,965 மூலதனச் செலவினமொன்றும் செய்யப்பட்டிருப்பினும் நிறுவகத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள வளங்கள் மற்றும் செய்யப்பட்டிருந்த செலவினங்களை கருத்திற்கொள்கையில் வளங்கள் குறைப் பயன்பாடு கொண்டவையாகக் காணப்பட்டன.

## 4.2 களஞ்சியக் கட்டுப்பாடு

---

இரசாயணத் திரவியங்கள் பொருட்பதிவேட்டுப் பத்தகத்தின் 329 விடயங்களில் தெரிவு செய்யப்பட்ட 24 விடயங்கள் மற்றும் என்ஸைம்ஸ் (Enzymes) பொருட்பதிவேட்டுப் பத்தகத்தின் 63 விடயங்களில் தெரிவு செய்யப்பட்ட 18 விடயங்கள் பரீட்சிக்கப்பட்ட போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இரசாயணத் திரவியப் பொருட்களில் ரூபா 572,119 பெறுமதியான 15 அசைவுறாத இருப்பு விடயங்களும் (Non Moving) என்ஸைம்ஸ் பொருட்களில் ரூபா 944,431 பெறுமதியான 18 அசைவுறாத இருப்பு விடயங்களும் அவதானிக்கப்பட்டன.

(ஆ) இரசாயணத் திரவியப் பொருட்களில் ரூபா 465,985 பெறுமதியான 10 மெதுவாக அசைவுறும் (Slow Moving) இருப்பு விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

## 4.3 நிதியங்களின் குறைப் பயன்படுத்துகை

நிறுவகத்தின் வங்கி நடைமுறைக் கணக்கில் ரூபா 12,085,507 வங்கி மீதியொன்று ஆண்டின் இறுதியில் அவதானிக்கப்பட்டதுடன் மீளாய்வாண்டில் குறைந்தபட்ச மாத இறுதி மீதி ரூபா 3,287,888 ஆக காணப்பட்டமையால் அம் மிகைப்பணத்தினை குறுங்கால முதலீடுகளில் முதலீடு செய்வதற்கு கவனம் செலுத்தியிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகப் பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) முற்பணங்கள்

(ஆ) கணக்கீடு

(இ) இருப்புப் பதிவேட்டுப் பொருட்கள்